[1972 மார்ச் 27

ஆலத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்

* 729 வின—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு பொது பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளை தாலூகா கடுக்கரை பக்கமிருந்து துவங்கும் ஆலத்துறையாற்றில் ஒரு அணை கட்டி புதிய கால்வாய்கள் மூலம் அந்த தண்ணீரை வறட்சி பகுதிகளுக்கு கொடுப்பதற்கு திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்தில் ஆலத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதுபற்றி ஒரு திட்டம் ஆய்வில் இருக்கிறது.

திரு. வீ.கே. இராஜாப்பிள்ளை : ஆலத்துறையாற்றின் குறுக்கே அணை கட்டி, நீர்த்தேக்கம் கட்டி, அந்த நீரை கன்னியாகுமரி வறட்சிப் பகுதிக்குக் கொடுப்பதோடுகூட, அதிகமாக இருக்கிற நீரை திருநெல்வேலி மாவட்டத்திற்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்தின் அடிப்படையில் தான் இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, ஆலத்துறையாற்றுத் திட்டத்தைப் பற்றி திருச்சியில் இருக்கிற ஆய்வுப் பொறியாளர் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தத் திட்டத்திற்காக எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டதா? இதற்குச் செலவாகும் தொகை எவ்வளவு? இதனல் பயன்படும் ஆயக்கட்டு எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எஸ்டிமேட் தொகை எவ்வளவு என்பது என்னிடமில்லை. 1,652 ஏக்கர் நிலங்களுக்கு பாசன உறுதி அளிப்பதற்கு இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

1972 மார்ச் 27]

சின்கோனு தோட்டத் தொழிலாளர்களுக்கு பூரிப்பூதியம்

*730 வினு—திரு. இ. ராமசாமி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

அரசு சின்கோனு தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்ற தொழிலாளர்களுக்கு கிடைப்பது போல் வருடாந்திர போனஸ் அளிக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லே.

திருமதி த. ந. அனந்தநாயகி: தொழிலாளர்களுக்கெல்லாம் 8–1/3 சதவிகிதம் போனஸ் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசோடு போராடுகின்ற மாநில அரசு அரசுத்துறையின்கீழ் வேலே செய்யும் சின்கோனு தொழிலாளர்களுக்கு அளிப்பதற்கு மறுப்பதற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: போனஸ் அளிப்பது அல்லது மறுப்பது என்ற பிரச்னே இல்லே. அரசுத்துறை தொழிலாளர் களுக்கும் போனஸ் வழங்குவதற்கு மொத்தமாக சட்டம் வந்தால், எல்லோருக்கும் சேர்த்துக் கொடுக்கப்படும்.

திரு. கு. அ. பொம்மன்: நீல மலேயிலிருந்து சிறிய தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து அரசுக்கு ஏதேனும் மனு கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானுல், அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மனுக்கள் வந்திருக்கின்றன. சட்டத்தின் கீழ் அரசுத்துறை நிறுவனங்களிலுள்ள தொழிலாளர் களுக்கு போனஸ் கொடுக்கவேண்டிய முறை இல்லாத காரணத் தினுல் நடவடிக்கை இல்லேயே தவிர, மொத்தமாக அகில இந்திய ரீதியில் ஒப்புக்கொள்ளப்பட்டு, சட்டம் வந்தால், நாமும் விரும்பி ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தற்பொழுது இருக்கிற சட்டம் அரசுத் துறையில் இருக்கிற தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதற்குத் தடையாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இப்பொழுது இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் டிரான்ஸ் போர்ட் இலாகாவில் உள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுகிறதே? அதே முறையை செயல்படுத்தி சின்கோனு